குறிப்பிட்டு பிரமலைக்கள்ளர்கள் என்று பிரித்து அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகிற நிலையில்லாமல் பிற்பட்ட நிலையில் இருக்கும் அத்தனை மக்களுக்கும் சலுகைகளை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, டி. என். சி.யில் தமிழகத்திலே 70 வகுப்பினைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். பிரமலைக்கள்ளர்களுக்கு 1979-80, 1980-81 ஆண்டுகளிலே 967 வீடுகள் கட்டுவதற்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. 967 வீடுகளில் 577 வீடுகள் இப்போது கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 390 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. எல்லா சமுதாயத்திற்கும் வீடு கட்டிக் கொடுப்பது என்பது இந்த அரசின் பரிசீலனையில் இல்லை.

கட்டளை மதுராமாரி மங்கலம் கிராமத்திலுள்ள ஏரிக்கு
மதகு அமைக்கும் திட்டம்.

531—(*வினா எண் 17661) திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் கட்டளை மதுராமாரிமங்கலம் கிராமத்தில் உள்ள ஏரிக்கு மதகு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மதகு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும (ஆ) கட்டளை கிராமம் மற்றும் அதன் சிற்றூரான மாரிமங்கலம் ஆகியவற்றிற்கு நீர் வழங்கும் கட்டளை ஏரியில் ஏற்கெனவே ஒரு மதகு இருக்கிறது. ஆயக்கட்டு நிலங்களுக்கு இந்த ஒரே மதகிலிருந்து நீர் வழங்குவதில் இதுவரை எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இது ஒரு ஏரி மட்டும் அல்லாமல் மாநிலத்திலே உள்ள பல ஏரிகள் இதுபோன்று மதகுகள் இடிந்தும் ஓட்டையாகியும் பொதுப்பணித் துறை பராமரிக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஷட்டர்ஸ், சொருகு பலகைகள் எல்லாம் சீரழிந்து இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? நீண்ட நாட்களாக இருக்கிற பிரச்சினையாக இருப்பதால் அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

1984 மார்ச் 31]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மதகுகளைப் பழுதுபார்த்தல், ஷட்டர்களைப் பழுது பார்த்தல் போன்ற பிரச்சினைகளெல்லாம் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. அவைகளை அவ்வப்போது பொதுப்பணித் துறையின் பாசனப் பிரிவு கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது ஏரிகள் பயன் படுத்தப்படக்கூடிய நிலைமை அதிகமாக இருக்கிறது, ஒரு காலத்திலே ஏரிகள் ஒரு சில ரால் மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது பொதுமக்களின் கையில் போய்விட்டதால் அதிகமாக பயன் படுத்தப்பட்டு அதனால் பழுது பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இயன்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் அதிக அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு துறைக்கு அறிவுறுத்தும்,

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் பல்வேறு இடங்களிலே மழை பெய்து ஏரிகள் நிரம்பி இருக்கின்றன. ஆனால் மதகுகள் பழுது பார்க்கப்படாமல் இருப்பதால் ஷட்டர்ஸ் பழுது அடைந்திருப்பதால் அதிலே உள்ள ஸ்க்ருக்கள் சரியாக இல்லாத நிலையில் தண்ணீர் அவைகளிலே தேங்கி நிற்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவைகளையெல்லாம் சீர்திருத்தி தண்ணீர் தேங்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்து விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய முறையிலே உடனடியாக அரசு, நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல் ஏரி பராமரிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மதகுகள் பராமரிப்பு போன்றவைகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சொன்னதைப் போல் இன்னும் அதிகமான அளவுக்கு அதிலே அக்கறை செலுத்த அந்தத் துறை அறுவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்தியமங்கலம் தொகுதியில் ஆய்விலுள்ள பாசனத் திட்டங்கள்.

532—(*வினா எண் 19074) திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் ஆய்வில் உள்ள பாசனத் திட்டங்கள் எத்தனை?

(ஆ) வறட்சியான இப்பகுதியில் பாசனத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ஆறு.

(ஆ) தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்